©
GOVERNMENT OF TAMIL NADU
2011

[Regd. No. TN/CCN/467/2009-11.
[R. Dis. No. 197/2009.
[Price: Rs. 1.60 Paise.

# தமிழ்நாடு அரசிதழ்

**சிறப்பு வெளியீடு** ஆணையின்படி வெளியிடப்பட்டது.

No. 48A] சென்னை, புதன்கிழமை, பிப்ரவரி 9, 2011
தை 26, திருவள்ளுவர் ஆண்டு — 2042

## பகுதி IV—பிரிவு 1

### தமிழ்நாடு சட்டமுன்வடிவுகள்

2011 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 9–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டப்பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்கக் காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 5/2011**

**தமிழ்நாடு மாநிலத்திலுள்ள மாநகராட்சிகள் தொடர்பான சட்டங்களை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டமுன்வடிவு.**

இந்தியக் குடியரசின் அறுபத்து இரண்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

**பகுதி I.**

**முன்னுரை.**

குறுந்தலைப்பும் தொடக்கமும்.

**1.** (1) இந்தச் சட்டம், 2011–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிச் சட்டங்கள் (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, மாநில அரசு அறிவிக்கையின் வாயிலாகக் குறிக்கக்கூடிய அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

**பகுதி II.**

**1971–ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தங்கள்.**

தமிழ்நாடு சட்டம் 15/1971.

5–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**2.** (இதன்பின்பு இந்தப் பகுதியில் 1971–ஆம் ஆண்டுச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1971–ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் 5–ஆம் பிரிவில், (1)–ஆம் உட்பிரிவில், ‘‘எழுபத்து இரண்டு’’ என்று வருகின்ற சொற்றொடருக்குப் பதிலாக, ‘‘நூறு’’ எனும் சொல்லானது அமைக்கப்படுதல் வேண்டும்.

49–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**3.** 1971–ஆம் ஆண்டுச் சட்டத்தின் 49–ஆம் பிரிவில்,—

(i) ஓரத் தலைப்பிற்குப் பதிலாக, பின்வரும் ஓரத் தலைப்பானது அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:—

''நூறு சிற்றொகுதிகள்.'';

(ii) (1)–ஆம் உட்பிரிவில், இரண்டு இடங்களில் வருகின்ற '' எழுபத்து இரண்டு'' எனும் சொற்றொடருக்குப் பதிலாக, ''நூறு'' எனும் சொல்லானது அமைக்கப்படுதல் வேண்டும்.

50–AA எனும் புதிய பிரிவைப் புகுத்துதல்.

**4.** 1971–ஆம் ஆண்டுச் சட்டத்தின் 50–A எனும் பிரிவிற்குப் பின்பு, பின்வரும் பிரிவானது புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:—

''**50–AA. தனி வகைமுறைகள்.**—இந்தச் சட்டத்திலோ அல்லது இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதிகளிலோ அல்லது வெளியிடப்பட்ட ஆணைகளிலோ என்ன அடங்கியிருந்த போதிலும், மாநகரச் சிற்றொகுதிகளின் நிலவரைப் பகுதி, சிற்றொகுதிகளின் மொத்த எண்ணிக்கை, மன்ற உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை ஆகியன, 2011–ஆம் ஆண்டு நடைபெறவிருக்கிற வழக்கமான தேர்தல் வரையிலும் 2011–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிச் சட்டங்கள் (திருத்தச்) சட்டம் தொடங்குவதற்கு முன்பு இருந்தவாறான அதே நிலையில் அமைந்திருத்தல் வேண்டும்.''.

## பகுதி III.

## 1981–ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தங்கள்.

5–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**5.** (இதன்பின்பு இந்தப் பகுதியில் 1981–ஆம் ஆண்டுச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1981–ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்தின் 5–ஆம் பிரிவில், (1)–ஆம் உட்பிரிவில், ''எழுபத்து இரண்டு'' என்று வருகின்ற சொற்றொடருக்குப் பதிலாக, ''நூறு'' எனும் சொல்லானது அமைக்கப்படுதல் வேண்டும். தமிழ்நாடு சட்டம் 25/1981.

51–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**6.** 1981–ஆம் ஆண்டுச் சட்டத்தின் 51–ஆம் பிரிவில்,—

(i) ஓரத் தலைப்பிற்குப் பதிலாக, பின்வரும் ஓரத் தலைப்பானது அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:-

''நூறு கோட்டங்கள்.'';

(ii) (1)–ஆம் உட்பிரிவில், இரண்டு இடங்களில் வருகின்ற '' எழுபத்து இரண்டு'' எனும் சொற்றொடருக்குப் பதிலாக, ''நூறு'' எனும் சொல்லானது அமைக்கப்படுதல் வேண்டும்.

52–AA எனும் புதிய பிரிவைப் புகுத்துதல்.

**7.** 1981–ஆம் ஆண்டுச் சட்டத்தின் 52–A எனும் பிரிவிற்குப் பின்பு, பின்வரும் பிரிவானது புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:-

''**52–AA. தனி வகைமுறைகள்.**— இந்தச் சட்டத்திலோ அல்லது இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதிகளிலோ அல்லது வெளியிடப்பட்ட ஆணைகளிலோ என்ன அடங்கியிருந்த போதிலும், மாநகரக் கோட்டங்களின் நிலவரைப் பகுதி, கோட்டங்களின் மொத்த எண்ணிக்கை, மன்ற உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை ஆகியன, 2011–ஆம் ஆண்டு நடைபெறவிருக்கிற வழக்கமான தேர்தல் வரையிலும் 2011–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிச் சட்டங்கள் (திருத்தச்) சட்டம் தொடங்குவதற்கு முன்பு இருந்தவாறான அதே நிலையில் அமைந்திருத்தல் வேண்டும்.''.

**நோக்க—காரண விளக்கவுரை**

அரசானது, முறையே மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிகளை அடுத்துள்ள ஒரு சில உள்ளாட்சி அமைப்புகளை இணைத்து அவ்விரு மாநகராட்சிகளின் எல்லைகளை விரிவாக்குவதென முடிவு செய்துள்ளது. மேற்சொன்னவாறு உள்ளாட்சி அமைப்புகளைச் சேர்ப்பதன் அடிப்படையில் மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு நடத்தப்படவிருக்கிற, அடுத்த வழக்கமான தேர்தலுக்காகச் சிற்றொகுதிகள் (கோட்டங்கள்) சீரமைப்பு செய்யப்படும். மேற்சொன்ன விரிவாக்கத்தின் பொருட்டு, அரசானது, மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிகள் ஒவ்வொன்றுக்கும் சிற்றொகுதிகளின் (கோட்டங்களின்) மொத்த எண்ணிக்கையை நூறு என்பதாக நிர்ணயிப்பதென முடிவு செய்துள்ளது. எனவே, அரசானது 1971—ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 15/1971) மற்றும் 1981—ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 25/1981) ஆகிய சட்டங்களை மேற்சொன்ன நோக்கத்திற்காகத் தக்கவாறு திருத்துவதென முடிவு செய்துள்ளது.

2. இச்சட்டமுன்வடிவு மேற்சொன்ன முடிவிற்குச் செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**மு.க. ஸ்டாலின்,**
*துணை முதலமைச்சர்.*

மா. செல்வராஜ்,
*செயலாளர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.